களனி பிரதேச சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களனி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, களனி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2.5 இன் படி நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 344,316,430 மற்றும் நீதிமன்றத் தண்டப்பண பெறுமதி ரூபா	களனி பிரதேச சபை எல்லையில் ஒரு வருடத்தில் எழுதப்படுகின்ற காணி உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் காணி உறுதிகளின் பெறுமதிகளை அறுதியாக குறிப்பிட முடியாமையால் முத்திரைக் கட்டணம் மற்றும் மதுவரி மற்றும் அபாயகர ஔடத சட்டத்தின் கீழ்	அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5,394,673 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நீதிமன்றத்தினால் விதிக்கப்படுகின்ற வழக்குகள் அறுதியாக காணப்படாமையால் நீதிமன்றத் தண்டப்பணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய முயாமல் உள்ளது என.	
(ஆ) நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பந்தி 3.7 இன் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்கவில்லை.	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பந்தி 3.17 பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
07 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் அடங்கியுள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் அட்டவணைகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 1,973,680 இற்கான இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது.	சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	வீதவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2009 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் சிட்டையிடப்பட்டிருந்தது.	வீதவரி பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்காக முற்பணத் தொகையொன்றாக ரூபா 2,194,600 தொகையொன்று 2024 மே 20 திகதி விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது என.	கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்			
(i) 371	1997 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான காலப் பகுதியில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 1,493,033 தொகைக்கான 39 முற்பண மீதிகளை அறவீடு செய்திருக்கவில்லை.	இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 39 முற்பண மீதிகளில் 35 முன்னைய பல வருடங்களில் இருந்து காணப்படுகின்ற மீதிகள் ஆகும் என.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.
(ii) 571	ரூபா 6,066,090 தொகைக்கான 4 வகையான 389 காலவதியாகிய வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை.	குறிப்பிட்ட வைப்புத் தொகைகளை ஆதனவழிப்புச் செய்யும் படி குறிப்பிட்ட வைப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 212,706,234 தொகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 411,945,994 தொகையாக காணப்பட்டது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
வங்கி நடைமுறைக் கணக்கில் 2024 ஆண்டு முழுவதும் ரூபா 115 மில்லியனை மிகைத்த காசு மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் 2025 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாத இறுதித் திகதியில் உள்ளவாறு வங்கி மீதி முறையே ரூபா 100 மில்லியன் தொகை மற்றும் ரூபா 79 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டதுடன், நிலையான வைப்பொன்றில் அல்லது ஏனைய குறுகிய கால முதலீடு ஒன்றில் முதலீடு செய்து சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளது என அவதானிக்கப்பட்டது.	2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூபா 100 மில்லியனிற்கான போலவே 2025 ஆண்டு பெப்ரவரி மாதம் ரூபா 150 மில்லியனிற்கான தொகை ஒன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என.	மிகைப் பணம் குறுகிய கால அடிப்படையில் முதலீடு செய்ய வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’
i.	வீதவரி மற்றும் வரி	55,000	34,401	65,050	43,097	53,600	53,997	61,196	41,372
ii.	வாடகை	29,622	33,290	32,847	9,460	29,161	29,061	30,842	10,713
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,500	1,604	1,655	7	1,000	1,321	1,271	59
iv.	ஏனைய வரு மானங்கள்	5,950	7,216	7,611	1,035	5,351	5,850	6,078	1,040
		92,072	76,511	107,163	53,599	89,112	90,229	99,387	53,184

2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டின் பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் ரூபா 410,604,000 தொகையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மதிப்பீட்டு வருமானமாகிய ரூபா 92,071,800 தொகையிடையே ரூபா 318,532,200 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	பதிலளிக்கப்படவில்லை.	சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	காலப் பகுப்பாய்வு அறிக்கையின் படி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 43,097,343 தொகை காணப்பட்டதுடன் அதில் 10 வருடங்களுக்கு மிகையான மீதி ரூபா 10,555,204 தொகையும் 5 வருடங்களுக்கும் 10 இற்கும் இடைப்பட்ட மீதி	தற்போது பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ரூபா 11,140,530 தொகையும் 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 6,567,641 தொகையும் காணப்பட்டது.		
(இ)	04 உரிமையாளர்களுக்கு சொந்தமான ரூபா 50,000 இற்கு மிகையான 06 அலகுகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,527,151 இற்கான கூட்டுப் பெறுமதி ஒன்றினை அறவீடு செய்திருக்காததுடன் இந்த ஆதனங்களை தடை செய்வதற்கு அல்லது நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,202,012 தொகைக்கான நிலுவை களியாட்ட வரி பெறுமதியில் ரூபா 676,060 தொகை 1 வருடத்திற்கும் 3 இற்கும் இடைப்படும் ரூபா 525,946 தொகை ஒரு வருடத்திற்கு குறைவான காலம் முதலும் இரண்டு சினிமா கொட்டகைகளிலிருந்து பெற வேண்டிய மீதிகளாகக் காணப்பட்டது.	அறவிடப்பட வேண்டிய மீதித் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை களியாட்ட வரியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக மாதாந்த முன்னேற்ற அறிக்கையின் படி வியாபார நிலைய வாடகை ரூபா 8,472,524 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட வியாபார நிலைய வாடகை ரூபா 19,092,799 தொகை காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடல் மூலம் அறவீடு செய்யப்பட்ட வாடகை பெறுமதி ரூபா 12,477,313 தொகை காணப்பட்டமையால் அறவீடு செய்வதில் முன்னேற்றம் 65 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவையிலிருந்து பதிவழித்தல்/ பிழைகளை சரி செய்தல் ரூபா 706,463 தொகை காணப்பட்டமையால் நிலுவையிலிருந்து அறவீடு செய்யப்படலின் முன்னேற்றம் 46 சதவீதத்தில் இருந்து 50 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.	தற்போது பகுதிகளாக நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கும் சட்டச் செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை வாடகை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	வருமானம் அறவீடு செய்தல் தொடர்பாக மாதாந்த முன்னேற்ற அறிக்கையின் படி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 733,489 இற்கான விழாமண்டப வாடகை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் அவை 10 வருடங்களை விட பழமையான மீதி ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் அந்த தொகையினை அறவீடு செய்வதற்கு முறையான செய்முறைகள் எடுக்கப்பட்டு இருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.	தற்போது வழக்கு அலுவல்கள் செயற்படு மட்டத்தில் காணப்படுவதுடன் பகுதிகளாக குறிப்பிட்ட தொகையினை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 230 நிறுவனங்களில் இருந்து ரூபா 2,103,030 இற்கான நிலுவை குப்பைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 10 நிறுவனங்களிடம் இருந்து ரூபா 25,000 விட மிகையான நிலுவைக் கட்டணங்களில் கூட்டுத்தொகை ரூபா 484,000 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2024 ஆண்டிற்கான பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்திற்காக கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திற்காக 2023 ஆண்டிற்கும் மற்றும் மேலும் 06 வேறு காணிப் பதிவாளர் அலுவலகங்களுக்காக 2024 ஆண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	களனி பிரதேச சபை எல்லையில் ஒரு வருடத்தில் எழுதப்படுகின்ற காணி உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் காணி உறுதிகளின் பெறுமதிகள் அறுதியாக குறிப்பிட முடியாமையால் முத்திரைக் கட்டணம் மற்றும் மதுவரி மற்றும் அபாயகர ஔடத சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் விதிக்கப்படுகின்ற வழக்குகள் அறுதியாக காணப்படாமையால் அட்டவணைகள் தயாரிப்பதற்கு முடியாமல் உள்ளது என.	அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதி பண்டங் கணிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,073,588 பெறுமதியான 4,348 புத்தகங்கள் காணப்பட்டது,	இந்த புத்தகங்கள் காணப்படுகின்றனவா என மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு விடுதலைக்கான காரணம் சமர்ப்பிக்கும் படி காலம் வழங்கப்பட்டுள்ளதுடன் தீர்மானக் குழுவிற்கு சமர்ப்பித்து அந் நூலகங்களில் அப்போது காணப்பட்ட பொறுப்பாளர்களிடம் இந்த பணத்தை அறவீடு செய்தல் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இனங்காணப்படுகின்ற முரண்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு பதிவேடுகள் நாளதுவரையாக ஆக்கப்பட வேண்டும்.

(ஆ)	06 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 1,135,000 பெறுமதியான ஸ்கவேடர் இயந்திரம் உள்ளூராட்சி நிறுவனங்களிடையே பரிமாறிக்கொள்வதற்கு அல்லது பயன்படுத்தக் கூடிய நிலைமை காணப்படாவிடின் முறைப் பிரகாரம் ஏல விற்பனை செய்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ரூபா 1,135,000 தொகைக்கான ஸ்கவேடர் இயந்திரம் அப்புறப்படுத்துவதற்காக விஷேட கணிப்பீட்டு சபையொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என.	அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	ஹுனுபிட்டிய பழைய தகனகூடம் 04 வருடங்கள் முதல் செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் தகனகூடத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என.	விரைவாக சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	**சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**		
	I. வனவாசல நூலகத்துடனான காணியில் அங்கீகாரமின்றி கட்டிடமொன்று நிர்மாணித்து அதில் வதியப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக சபையினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வனவாசல பொதுநூலகம் மற்றும் கிணறு அமைந்துள்ள காணியில் பலகையினால் குடில் ஒன்று தயாரித்து மனநோயால் பீடிக்கப்பட்ட வயதுமுதிர்ந்த பெண் ஒருவர் காணப்படுவதுடன் அது தொடர்பாக பிரதேச செயலாளருக்கு அவள் தொடர்பாக கண்டறிந்து முதியோர் இல்லமொன்றிற்கு அனுப்பும்படி அறிவிக்கப்பட்டது என.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
	II. சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 96 காணிகளில் 22 காணிகளுக்கு நிலஅளவைப் படங்களும் 69 காணிகளுக்கு உரித்தினை உறுதிப்படுத்தக் கூடிய சட்டரீதியான ஆவணம் ஏதும் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது என.	சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(உ)	47.85 பர்சஸ் காணிப் பகுதியொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடி 36 கடையறைகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் தரை மாடியின் மற்றும் மேல் மாடியில் 14 கடையறைகள் உடன்படிக்கைக்கு முரணாக மூடப்பட்டிருந்தது.	கடையறைகள் உடன்படிக்கைக்கு முரணாக நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சபைக்கு உரித்தாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு சபையினால் வாடகையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என.	நிலுவைத் தொகை அறவீடு செய்து உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் படி 1.6 பர்சஸ் காணிப் பகுதியில் அமைந்துள்ள டயர் கூட்டுத்தாபன வீதியில் கண்டி வீதிக்கு அண்மையாக கடையறை ஒன்றுடனான காணியின் பெறுமதி ரூபா 1,250,000 தொகை என காணிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பழைய கடையறைகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை.	புதிய கடையறை பெறுமதி மதிப்பீட்டு சபையின் மூலம் எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும் என.	கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(எ)	2024 ஆண்டின் மெவெல்ல பல் கருமக் கட்டிடம் பராமரிப்பு செயற்திட்டத்தின் கீழ் சுமார் 48 அடி நீளம் சுமார் 28 அடி அகலமான பகுதி மேல் மாடியில் கொங்கிரீட் கற்களை பயன்படுத்தி சுவர் கட்டப்பட்டு அஸ்பஸ்டோ கூரை போடுவதற்காக ரூபா 2,907,783 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் மேற்கொள்ளப்பட்ட செலவு சிக்கனமற்ற செலவொன்றாக ஆகியிருந்தது.	மீதிப் பகுதி 2025 ஆண்டில் மேற்கொள்ளப்படும் என.	விரைவாக வேலைகளை பூர்த்தி செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலை இடைநிறுத்தப்பட்ட இரண்டு ஊழியர்களிடம் மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 10 உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,298,215 தொகை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை.	அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவைக் கடன்மீதி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.